# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
# CC No. 489/2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw2 |
| Name | : Loganadhan |
| Father/Husband's Name | : Lakshmanan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11.02.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மறைமலைநகர் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.04.2025ம் தேதி காலை 11.15 மணியளவில் நானும், உதவி ஆய்வாளர் தினேஷ், செல்லப்பன் காவலர் ஆகியோர்கள் பணியில் இருந்தபோது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், ஆய்வாளருக்கு போன் செய்து அனுமதி கேட்டு பெற்றதாகவும், சோதனைக்கான கடித்ததை அவரின் மேஜையில் வைத்துவிட்டதாக உதவி ஆய்வாளர் என்னிடம் தெரிவித்தார். பின்னர், சுமார் காலை 11.30 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, பொத்தேரி SRM கல்லூரி அருகே உள்ள ஏரிக்கரையில் இருந்தபோது, மேற்படி உதவி ஆய்வாளர் தினேஷ்க்கு தகவல் கொடுத்த தகவலாளி நாங்கள் நின்று இருந்த ஏரிக்கரைக்கு வந்து, இரு நபர்களை அடையாளம் காண்பித்து, கிரிராஜன் மற்றும் குருகிரண் என்று சொல்லிவிட்டு, தகவலாளி சென்றுவிட்டார். தற்போது எதிரிகள் ஆஜரில் இல்லை. எனக்கு எதிரிகளை நன்கு அடையாளம் தெரியும். கிரிராஜன், குருகிரண் ஆகியோர்களை ஏரி கரையின் மேலே 12.15 மணியளவில் இருவரையும் மடக்கி பிடித்து, எங்கள் உதவி ஆய்வாளர் அவருடைய அடையாள அட்டையை காண்பித்து, போலீஸ் என்று கூறி, நீங்கள் கஞ்சா விற்பனைக்காக

தான் வந்து இருக்கீறீர்கள் என்று கூறி, கையில் என்ன வைத்துள்ளீர்கள் என்று கேட்டபோது, அப்போது, எதிரி கிரிராஜன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி குருகிரணும் என்னுடன் கஞ்சா விற்றதாக கூறினார். பின்னர், ஒப்புதல் வாக்குமூலத்தில் பொது மக்கள் சாட்சிகள் யாரும் முன்வராததால், நானும், காவலர் செல்லப்பன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி, ஆஜர் எதிரிகளிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி கிரிராஜனை சோதனை செய்த போது, அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் கேரி பேக்கில் வைத்திருந்த எடை போட்டு பார்த்தபோது, 600 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் செல்லப்பன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி, 2ம் எதிரியான குருகிரண் தற்போது ஆஜர் எதிரி உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி குருகிரணை சோதனை செய்தார். அப்போது குருகிரணிடம் கஞ்சா எதுவுமில்லை. எதிரி கிரிராஜன் உடன் கஞ்சாவை விற்பதற்காக மட்டும் வருவேன் என்று சொன்னார். பின்னர், எதிரிகளை உரிய காரணம் கூறி, கைது செய்த போது, அவர்களுக்கு கைது அறிவிப்பு நமூனா மற்றும் ஆய்வு நமூனா ஆகியவற்றை எதிரிகளிடம் கொடுத்து கையொப்பம் பெற்றார். பின்னர், எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரிகளின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

நான் மறைமலைநகர் காவல்நிலையத்தில் எவ்வளவு வருடங்களாக பணியாற்றி வருகிறேன் என்றால் மார்ச் 2023ம் வருடத்திலிருந்து பணியாற்றி வருகிறேன். தற்போதும் அங்கு தான் வேலை செய்கிறேன். மறைமலைநகர் காவல்நிலையத்தில் சுற்றியுள்ள எல்லா திசையும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கும் எவ்வளவு நேரத்தில் சென்றோம் என்றால் சுமார் அரை மணி நேரத்தில் சென்றோம். யாருடைய உத்தரவின் பேரில் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் நான் சம்பவ இடம் சென்றேன். காவல் ஆய்வாளரின் பெயர் தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் சம்பவ இடம் சென்றதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேனா என்றால் உதவி ஆய்வாளர் பதிவு செய்திருப்பார். எனது பாக்கெட் டைரியில் ஏதேனும் குறிப்பு செய்து, வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடம் எங்கு என்றால் எஸ்ஆர்எம் கல்லூரி அருகே உள்ள ஏரிக்கரை. அந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஏரிக்கரை ஆள் நடமாட்டம் மற்றும் வாகன போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். எதிரியை கைது செய்த போது, பொது அதிகாரி சாட்சியாக கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. எதிரிகளின் முகவரி தெரியுமா என்றால் தங்கயிருக்கும் இடம் தெரியாது. எந்த மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியும். எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொல்லப்படும் பொருட்களின் புகைப்படமோ அல்லது வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் உதவி ஆய்வாளர் அவருடைய செல்போனில் எடுத்தார். அந்த வீடியோ ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், நாங்கள் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில், காவல்உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது தவறான வழக்கு பதிவு செய்துள்ளார் என்றாலும், காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்த ஆவணங்களை நான் கையெழுத்து மட்டும் போட்டேன் என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.